சி.சி. எண்.14/2012 சாட்சி. திரு.சாமிநாதன்

அ.சா -8 11.10.2019

மு.விசாரணை.

நான் 31.03.2011-ம் தேதி ஓமலூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். 30.06.2010-ம் தேதி இரவு 8.00 மணிக்கு எம்.சுந்தரராஜ் .கம்பெனி மேனேஜர் திரு.செல்வராஜ் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 596/10 பிரிவு 380 இதசவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.9. அதன் அசலை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு 01.7.2010-ம் தேதி சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வராஜ், குணசேகரன், மோகன்ராஜ், குமார் ஆகியோரிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். கணேசன், கந்தகுரு ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அந்த பார்வை மகஜரில் மேற்கண்ட சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கினேன். என்னால் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.10. பின்பு சம்பவ இடச்சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். 8.7.10-ம் தேதி காலை 5.30 மணிக்கு போலீசார் பார்ட்டியுடன் மேற்படி குற்றவழக்கில் எதிரியை தேடி செல்லும் போது ஓமலூர் சேலம் மெயின் ரோடு கரும்பாலை வடக்குபுற பஸ் ஸ்டாபில் சுமார் 25 வயது மதிக்கதக்க கையில் பையுடன் நின்றிருந்தவரை சந்தேகத்தின் பேரில் விசாரிக்க அவர் பெயர் விலாசம் மாறி மாறி முன்னுக்குபின் முரணாக சொன்னதால் அந்த சமயத்தில் அங்கு வந்த கருப்பூர் கிராம நிர்வாக அலுவலர் பாப்பாத்தி மற்றும் உதவியாளர் சுப்பரமணி ஆகியோர் முன்னிலையில் எதிரி வினோத் (எ) வினோத்குமார் காலை 5.30 மணி முதல் 7.00 மணிவரை ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவ இடத்திலேயே விசைதறி இயக்க பயன்படுத்தப்படும் போர்டு ஒன்றை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றியும், அந்த மகஜரில் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையொப்பம் பெற்றேன். சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்பு எதிரி தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் தான் மறைத்து வைத்திருக்கும் இடத்தையும், பொருளையும் அடையாளம் காண்பித்து எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னதின் பேரில் சம்பவ இடத்தில் இருந்து சாட்சிகளையும், எதிரியையும் அழைத்து சென்று காலை 8.00 மணிக்கு சரக்கப்பிள்ளையூர் சாமியார் காட்டுவளவில் உள்ள எதிரியின் வீட்டில் உள்ள வைக்கேல் போரின் அடியில் மறைத்து வைத்திருந்த கண்ரோல் போர்டு 3 ஐ மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் எடுத்து ஆஜர் செய்ய மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி மேற்கண்ட சாட்சிகளிடம்

கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரியை அழைத்து கொண்டு நிலையம் வந்து பாரா காவல் வசம் ஒப்புவித்து திரேக சோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும் கைப்பற்றபட்ட பொருட்களை படிவம் 95-ன் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 95 அ.த.சா.ஆ.11 மற்றும் அ.த.சா.ஆ.12 ஆகும்.

(சான்று பொருட்கள் குறியீடு செய்யவேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒம்/-சாமிநாதன்

ஒம்/- டி.மாலதி
குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC)
ஓமலூர்